
ஸ்ரீ குரு பூர்ணிமா!
இதழ் 1
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஸ்ரீ குரு பூர்ணிமா


பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு

## இதழ் 1

# பொருளடக்கம்

1. பிரம்ம பிரபஞ்ச லீலா----------------------------------------3
2. உள் ஆழ்ந்த கருத்து----------------------------------------14
3. ஆதியின் ஓர் உண்மை----------------------------------------28
4. அணுக்களின் விபரம்----------------------------------------30
5. எம் இருப்பு----------------------------------------52

எல்லாம் நீ!



"சத்திய வாக்கு"

சத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடிரு.

"சத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"சத் குரு திருவடி துணை!"

"நம்பினோர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்யாணம்"

"யத் பாவம் தத் பவதி!"

ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம் ஓம்!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும் அதுவும் இல்லை!"

நீ அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும்.



ஒளி ②

என்ற இருப்புத் தன்மையே முதல் இடம் பெற்றுளும். ஒளியின் இயக்கம் இல்லாத தன்மையால் ஒலியே முதல் இடம் பெறுகிறது.

அன்பு மயமான ஆத்மானந்த குழந்தைகளே!

தற்காலிகமாக சிவ ஆதி ஸ்ரீமஹான்கள், திருவாக்காக, ஸத்தான அமுத ரகஸியார்த்த, வாக்குகள் கிரஹிக்கப் பட்டன.

அவர்கள் தோற்றமும், இருப்பும், மட்டுமே உடையவர்களாயும், ஆனால் நாமா எதுவும் இல்லாதவர்களாயும் இருப்பதால், தொகுப்பின் தொடர்ச்சி இல்லாமல், ஆங்காங்கே, வெளிப்படும், ஸத்திய வாக்காக மட்டும் இருக்கும்.

தெளிவு பெற விரும்புகிறவர்கள், ஆங்காங்கு நடை பெறும், ஸத்ஸங்க உரையாடலில், தெளிவு பெறவாம்.

பாபா.



உ

பர! நிலையாய் ③

அமைதி! சாந்தி!

மௌனம்! ஆனந்தம்!

இவைகளே முதலிடம் பெறுவதால் அசைவற்ற ஆசையற்ற

① இருப்பாகிய மண்ணே! போதும்

இதன் தவிப்பு, எப்படி அமைகிறது என்றால்?

**ஆதிஸ்ரீமஹான்களின்!**

அமுத வாக்கில் பிறந்த ரகஸ்யம்

**பிரம்ம பிரபஞ்ச லீலா!** ஆகும்.


அந்த காலாதீத பரம் பொருளுக்கு **பர!** சொரூபம்!

**பர!** ப்பிரம்மம்! என்பும் வாக்கின் விளக்கம், பேசப் படுகிறது. அதை **அகண்டபேரொளி!** எனமட்டும் அழைப்போம்.

அது தன்னைத் தானே! தான் தானாய்! வெளிப்படுத்திக் கொள்ளும் நியதிக்குமாக, தம்மை, இரு நிலைகளில், தோற்றுவித்துக் கொண்டது, என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

① **ஒளி! உ ஒலி!**

என இரண்டாகும். இதன் உண்மை என்னவென்றால்?




ஒளியில் இருந்தே, ஒலி வந்தது என உணர்க.

ஒளி என்றால் அகண்ட பேரொளி ஆகும்.

ஒலி என்றால் யோக மாயாவின்

ஸப்தார்த்தமான ஓம் என்ற பிரணவம் ஆகும்.

உகாரமையாக சொல்லும் நிலையில், மூன்றே பார்த்தோம். மண்ணே இறுகி பாறையானது.

அப்பாறைகளே, நாமரூபம் பெற்று திரிகர்த்தாக்களும்

மற்றும் அனைத்து மனித இனத்தையும் சேர்த்து ஜீவ கோடிகளும், அதுவே ஆனது என உணர்வோம்.

இங்கு பர நிலையில், யோகமாயாவின் இருப்பு என்றும். இறை நிலையில் யோகமாயாவின் ஆனந்த

விளையாட்டு என்றும் சொல்லலாம்.

இங்கு இன்பமும் துன்பமும் இல்லையென்பதே வைத்தியம்.



ஓர் நிலையில் இந்த ஜகவிளையாட்டை சொல்வது என்றால்? ௫

மண்ணை, இந்த மாயா வானது களிமண் என ஆக்குகிறது. அக்களி மண்ணை இந்த மனமானது

**நாமரூபமாக**, நாதவிதமாகவும், தவர்ச்சிகரமாகவும்


இன்பதுன்பம், தோற்றல் அது **மனதின்** விகாரமும்! தோற்றமும், வியகாரமும், பிரபஞ்சமும் ஆகும்.

இங்கு பேரொளி, என்பது, இருப்பு தன்மைக்கு ஆதாரமாகவும், ஆதரவாகவும், ஆகாரமாகவும் ஆனதை, உணர வேண்டும்.

இங்கு ஹிரணையம் என்ற, ஓம் காரமானது, இயக்கத் தன்மைக்குமட்டும் ஆதாரமாக இருக்கிறதை, உணர வேண்டும்.

இங்கு இருப்புத்தன்மை, என்னும் போது, அது **ஜட** சொரூபமாகிறது. காரணம் இயக்கம் இல்லை.

இங்கு இயக்கத்தன்மை என்னும் போது அது **ஜீவ** சொரூபமாக, இடம் பெறுகிறது. காரணம் இங்கு **மாயாவும் மனமும்**, இணைந்து செயல்படுகிறது.



தோன்றச் செய்து (6)
உனக்கு! எனக்கு!
போட்டி பொறாமை
கொண்டு ஜீவபாவனை
யோடு காரசாரமாக
மனம் விளையாடுகிறதே
யன்றி நாம் விளையாடவில்லை
நான்! என்னை விட்டு! போட்டி பொறாமையை
தொலைத்து எல்லாம் நவமே என சமமாக இருப்பதே
சுகம்.

இங்கு ஜட சொரூபத்தைப் பற்றி, விளக்கம் தேவை இல்லை. அது எந்த பிரச்சனையும், இல்லாதிருக்கிறது. ஆனால் இங்கு, ஜீவ சொரூபமே, முக்கிய இடம் பெறுகிறது.

காரணம் :- **விகாரம்** காட்சியிலும்! கேள்வியிலும் களங்கம் தோன்றுவதாகும்.

**விவகாரம்** மேல் நிலையால் தோன்றும், களங்கத்தால் வரும், பிரச்சனையாகும்.

இவ்விரண்டும் **மனதின்!** இயல்பான குணங்களாகும்.

இங்கு இம்மனமானது, காணும் காட்சிகளிலும்
,, ,, கேட்கும் ஒலிகளிலிருந்தும்,
விகார, விவகாரம், அடைந்து **வாக்கு**
பாவமாக, புண்ணியமாய் வினைகளை,
விதைத்து விடுகிறது; என உணர வேண்டும்.



ஒளியில் இருந்தே ஒலி வந்தது (7) என்றால்?

ஒளியின் அதிர்வே ஒலி ஆகும்.

ஆகவே ஒளியே முதலில் வந்தது. பின் அதன் அதிர் வாகிய ஒலி (பிரணவம்) வந்தது.

இதன் முக்கியம் என்னவென்றால்?

ஒளி என்றால் இருப்பு தன்மையாகும்.

ஒலி பிரணவத்தில் அதன் இயக்க தன்மையாகும்.

இங்கு அதன் இயக்கமே, முக்கிய இடம் பெறுகிறது.

அதன் இயக்கம் தன்னை இரண்டாக ஆக்கிக் கொண்டது.

(1) ஸப்தப் பிரபஞ்சம்!

(2) அர்த்தப் பிரபஞ்சம்!!

என இரண்டாகும், என்றார்கள் ஞானிகள்.

(1) ஸப்தப் பிரபஞ்சம் என்பது, இருநிலைப் படும்.

இயற்கையாக கிடைக்கும், ஒலி ஓசையாகும்.

(2) வாக்காக ,, ,, ,,.

(1) அருவி, கடல் அலை, மர அசைவு, வாயுவின் அழுத்தம், முதலியன, இயற்கையின் ஒலி ஓசையாகும்.

(2) மனித இனம் உட்பட, அனைத்து ஜீவராசிகளின் வாய் அசைவுகளும், வாக்கின் ஒலி ஓசையாகும்.



ஒருவர் வாக்கின் ஸப்தார்த்தை ஓ அர்த்தம்/ அனர்த்தம் ஆக காணமைக்கு— நாமரூப பேதம் ஆகும். அதாவது விருப்பும்! வெறுப்பும்! ஆகும். அங்கு அந்த நாமரூப பேதத்தை தாண்டி

மேலே சொல்லிய இவ்விரண்டும், ஒன்றில் ஒன்று, **உராய்வதால்**/ மெய்யும் ஓசையாகும். அதில் ஓம்காரம்/ என்ற பிரணவமானது, தான் தனைய், இயற்கையாய் ஒலிப்பதாகும். இது, இங்கு ஒன்றுடன் ஒன்று உராய்வதில்.


ஆகவே முந்தையதை **கீதம்**/ என்பார்கள்.

பிந்தையதை **நாதம்**/ ,, .

இவைகளில் ஓர், முக்கியத்தை மட்டும் உணர வேண்டும். ஒன்றுடன் ஒன்று, உராய்வதில் வரும் ஓசையை/ சற்று ஆராய வேண்டும். இதுவரை கூறியது, ஸப்த பிரபஞ்சத்தின் விளக்கம் ஆகும்.

இது எந்த **உபாதையும்**/ இல்லாததாகும்.

இனி **உபாதையோடு**/ கூடிய, அர்த்தப் பிரபஞ்சத்தை நோக்குவோம்.



ஸ்ரீமகவானைக் காணவும்! உணரவும்! மனம் பழகிவிட்டால் மனம் அறிவு! என ஆகிவிடும். அது ஞானம் அறிவானது இயல்பாய் அர்த்தம்! அனர்த்தம் ஆகாது. ஆனந்தம் ஆகும்.

9

இந்த அர்த்தப் பிரபஞ்சமானது, ஒன்று வாக்கு! வடிவிலும், மற்றொன்று வரி! வடிவிலும் வருவதாகும்.

வாக்கு வடிவம் :— மனித இனம், உட்பட, அனைத்து ஜீவராசிகளும், முறையே பேச்சும்! சப்தமும் ஆகும். சப்தமும் பேச்சு தான்! ஆனால் மனித இனம் புரிய முடியாது! புரிய இயலாது!!

வாக்கு! வடிவம் :— அனைத்து ஜீவராசிகளும், பேசுகின்றன. ஆனால் அதை உணர முடியாத தன்மையால், சப்திக்கிறது! கத்துகிறது! என அதை நாம் வசதியம் செய்வதில்லை. ஆனால் ஓர் மனிதன்! கத்தினால் (பேசினால்) மட்டும், அர்த்தம் புரிகிறது. அந்த கத்தல் (பேச்சு) அர்த்தம்! பெறுவதில்லை. அனர்த்தம்! பெறுகிறது.



அர்த்தம் & அனர்த்தம் என கூறுவது எப்படி உணர வேண்டுமென்றால்? (10)

சர்வார்ப்பண நிலையில் அமைதி & சாந்தியாக தேக தாபம் இல்லாமல்

நாம் **அடங்கி!** உணர்ந்தால் அது அனர்த்தம் உண்டாகாது ஆனந்தம் உண்டாகும்.

சர்வார்ப்பண நிலையில், **இறை!** உணர்வோடு இருந்தால், **அர்த்தம்!** அனர்த்தமாகாது.

,, ,, **ஆனந்தம்!** அதாவது? ஆகும்.

**நாம் ரூப** சம்பந்தம் கொண்டு, உறவு சுற்றம் நட்பு நிலையில் **ராகத்துவேஷாதி!**

விருப்பு & வெறுப்புடன் உள் ஆழ்ந்தால் அது சந்தேக, களங்க, கலக்க, பயம் தான் தோன்றும்.

இந்த ராகத்துவேஷாதி, தேகத்திற்கு இடம் கொடாமல், எல்லாம் ஒருவனே! எல்லாம் அவன் செயலே! (தான்)

**அவரவர்!** புண்ணிய பாவத்திற்கேற்ப, நிகழ்ச்சிகள், பழக்கின்று நடைபெறுகிறது என்று

நாம் **அடங்கி!** இருந்தால், அதுதான் உண்மை அது ஆனந்தம் ஆகும்.

**அடங்கும்!**



(11)

பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! கௌரவம்! அந்தஸ்து! போட்டி & பொறாமையால்

இறை அடக்கம்

நிஜமான உணர்ச்சிக்கு

அடிமையாகல் பிரக்ஞையும் இன்ப துன்பமும் இணைமாறையும் தன் மிஞ்சும்.

ஒளி வடிவம். — இதில் பழங்காலரும் (நூல்களும்) அடங்கும். இவ்விரு நிலை

தற்கால புனிதர்களும் ↑ ஸ்ரீ ஆதி ஸ்ரீமஹான்கள் தரும் ஏந்தி கனியும், உள் வாசகங்கள் நாம் ஆழ்ந்து! அனுபவித்து! அனுபவ நிலையில் பெறுமல்,

மனப்பாடம் என்னும் படிப்பறிவுடன்! (அனுபவ அறிவு இல்லாமை) கூடி. நாம் சாதனை செய்யாமல் போதனையில் நின்று விடுகிறோர்கள். இது எப்படி முடிகிறது என்றால்?

ஊருக்கு உபதேசமே தவிர. தமக்கில்லை! என அனுபவ ஞானமில்லாமல் வாய்! ஞானமாக ஆகிவிட்டபடியால், இந்த ஒளி வடிவமும் பலன் தராமல், அர்த்தம்! அனர்த்தம்! ஆகிவிட்டது.



வரியோ? வாக்கோ?

பாஷை!

முக்கியமல்லவே உன்

மனமே! முக்கியம்.

அடங்கி உள் ஆழ்ந்தால்

அமைதியின் ஆனந்தம் தானே ஸ்புரிக்கும்.

இதை உற்றுணர்ந்து நோக்குக.

வரி வடிவமோ? வாக்கு! வடிவமோ?

முறையே எழுத்தும் ஒலியும்! தானே?

(மை சித்ரம் ஒலிச் சித்ரம் தானே)

இதற்கு, அர்த்தம் கற்பித்தது யார்?

உன் மனம்! தானே? இங்கு எப்படி மாறுமென்றால்

இறை குரு உணர்வோடு, அமைதி நிலைக்க யோக

உணர்ந்தால், அது அறிவின் நிலையில் ஆனந்தமே!


நாம ரூப, சொந்த பந்த பாச உறவு, உடல் நிலையில்,

உணர்ச்சிக்கு அடிமையானால், இன்ப துன்பமே!


யுவர் சாய்ஸ்???

பிரம்ம பிரபஞ்ச லீலா

## ஒளி & ஒலி




## எம் இருப்பு





ஸங்கல்ப விகல்பம் என்னும் இரண்டும்! (13)

குணங்களின் எந்த விஷய இந்த மனம் விரும்புகிறதோ அந்த விஷயமே இந்த மனம் விரும்புகிற என்னும் சக்தியும்

(௨) உ அறிவாகி

# உள் ஆழ்ந்த கருத்து! அறிவு!

அறிவு என்றால் ஆன்மா. ஆன்மா என்றால் ஞானம்.

எல்லாம் நானே என பரந்து, விரிந்து, அனுபவம் பெற்றால், இந்த அறிவே **பேரறிவாக!** மாறிவிடுகிறது. இந்த அறிவே **மாயா** உடன்! சேர்ந்தால், இந்த அறிவே **ஸ்ரீபகவான்!** என ஆகிவிடுகிறது. இந்த அறிவை **மனம்!** அஹங்கரித்து, அபிமானித்து **நான்தான்** எனப்பிடிக் கொண்டால், இந்த அறிவே, அறியாமையின் **ஜீவன்!** (மனிதன்) என ஆகிவிடுகிறது.



குற்றம் குறை (14)

மட்டுமே ஒழிந்து

மனம் அறிவாகி விட்டால்

நாமரூப

ஜகஜீவ தோற்றமாகிய

உறவு! சுற்றம்! நட்பு!

பொன்! பெண்! பொருள் மோகமும் ஆகிய

அகிலம் சர்வநாசமாகி விமலத்துவ ஸித்தியம்.

இந்த அறிவே, ஸித் சொரூபம்! இந்த அறிவே

பரமாணுக்கள்! இந்த அறிவே ஸிதாகாசம்!

இந்த அறிவே ஸித்பரம்! இந்த அறிவே

பரமாத்மா! இந்த அறிவே பரப்பிரம்மம்!

இந்த அறிவே காலாதீத **பரசொரூபம்!** ஆகும்.

# மனம்!

மனம் என்பது மாயாவின் மைந்தன்!

மனம் என்றால் **ஸங்கல்பவிகல்பம்!**

அதாவது **குற்றம் குறை!** கற்பனையாகும்.

இம்மனதின் குற்றம் குறை கற்பனை, எப்படி

தோன்றுகிறது என்றால்; பார்க்கும் பார்வையிலும்


கேட்கும் வார்த்தைகளிலும் ஒலிகளிலும்



இம்மணிகள் மட்டும்! தம் தோஷ! (15) மமைமய கர்மவினையால் நான்! எனது! விராத தன்மையால் எங்கும்! எதிலும்! எவரிடத்திலும்! எதனிடத்திலும்! விருப்பு வெறுப்பு இல்லாத தன்மையால் தம் கர்மவினையால்:

பேதம்! காண்பது, முதலாவதாகும். இப்பேத திருஷ்டியினால், விருப்பு வெறுப்பு! தோன்றுவது, இரண்டாவதாகும். இந்த விருப்பு வெறுப்பினால் குற்றம்குறை! தோன்றுவது மூன்றாவதாகும். இதில் கூறிய, இம்மூன்றும் மனம்! வசம் அகப்பட்ட, இந்த மனிதனிடம்! மட்டும்! இருக்கிறதேயன்றி; வேறு எந்த ஜீவ! வர்க்கங்களிடமும்! நடப்பன! பறப்பன! நீந்துவன! ஊர்வன! மற்றும் கிருமி கீடங்கள் அனைத்திடத்திலும் இல்லையென்பதே சத்தியமாகும்.

மற்றும் மேலே கூறிய, அனைத்து ஜீவ சொரூபங்களிடமும் அறிவே! இருக்கிறது. மனம்! இல்லையென்பதே சத்தியமாகும்.



16

சொல்லாலும்! செயலாலும்! புண்ணியபாபங்களை விதைத்து அப் பசை நூலாலே ஓர் பட்டுப்பூச்சி போன்று தன்னைத் தானே பின்னித்து நாசம் அடைகிறான்.

அவை அனைத்தும், அறிவு சொரூபமாக இருப்பதால், அதனதன் **வினைவிதியின்படி** கர்மாவை, ஒழுங்காக எப்போதும் இவ்வாறு, அனுபவித்து முடித்து கழிக்கின்றன. (களிப்படைகின்றன)

ஆனால் **மனம்** படைத்த இம்மனிதன் மட்டும், அவைகளை காணுமிடத்து, தன் மனமயக்கத்தால், அவைகளுக்கும், மனம் உள்ளதாக கருதுகிறான். இம்மனிதன் மட்டும், அச் ஜீவ வர்க்கங்களிடமும்! இம் மனித வர்க்கங்களிடமும்! கற்பனையாக காணும் பேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை! இவைகளால், உருவாக்கப்பட்ட தம்முடைய இன ஜன பேதமாகிய **அகங்கார அபிமானத்தை!** விடாமல், புண்ணிய பாபத்தையும், ஜனன மரணத்தையும் தானே வலுவில் ஒத்துக்கொள்கிறான்.




வினையை! நான்! எனது! (17)

என நீ விடாத வரையில் உன் விதி (மறவி நோய்) உன்னை விடாது என்பதே வைத்தியம்.

அனைத்து ஜீவ வர்க்கங்களும், அறிவு! சொரூபமாக இருப்பதால்; அதனதன் வினையை! அனுசரித்து விதி! அதாவது காலதேவன்! ஆணைக்கு உட்பட்டு தகுந்த வணங்கி ஏற்று அனுபவித்து விட்டு, வந்த வினை முடிந்தாலும், பழவினை! (சஞ்சிதம் வினை) யிலிருந்து மேலும் ஜன்மா தொடர்கிறது.

இம்மனம் படைத்த மனிதன் மட்டுமே, கர்ம! விதிவினையையும் ஸ்ரீ! மந்தே வண்மையால்! ஆகவே இய கர்மாவை ஞானக்ஷணதை விடாத் தன்மையால், வலிய வல் தோஷ வினைகள்! ஏற்று அவதிப்படுகிறான் இம்மனிதன் மட்டுமே, ஞானக்ஷணதை! விட்டால் போதும் ஜீவன் முக்தியின் வழி தானே பிறக்கும்.



ஜீவ கர்த்தத்துவம்
நான் எனது (18)
அழுந்தாவிமறைந்திடினும்
ஈச கர்த்தத்துவம்
எல்லாம் அவனே என
பிரகாசிக்கும். அதாவது தோஷகுணம்
அழுந்தாவி ஸத்வ குணம் நிலைபெறும்.

ஓர் உண்மை என்னவென்றால்?
நம் மனித இனம் எல்லோரிலும் இருக்கும்,
அறிவு! ஒன்றே! ஆன்மா/ஸ்ரீபகவான்/ ஒன்றே!
ஆனால்?
நம் அனைவரிலும் இருக்கும் மனம்! ஒன்றல்ல
அது வேறுவேறாகும்! அதன் காரணம்:-
மனம் என்றால், குண தோஷ எண்ணம் உடையதாகும்
அறிவு என்றால், ஏக குணமான ஸத்வம்! ஆகும்.
அதன் காரணமும்:- இம்மனித ஆன்மா ஒன்றுதான்,
முக்திக்கு (பரமுக்தி பரமுக்தி) உரியதாகும்.
ஆகவே சாதனையாளர், எவராயினும், முதலில்
ஜீவ! குண தோஷங்களை, முதலில் நாசம் செய்ய வேண்டும்.
பின்னர் ஈச! குண/ஸத்வத்தை நாசம் செய்ய வேண்டும். ஜீவன்
பின்னர் துறைத்த! நிலை பெற்று முக்தி பெறவேண்டும்.



தீயவர் நல்லவராகவும் தீயதாகவும் தோன்றுகிறது என்றால் உன் பார்வையும்! பேச்சும் சரியில்லை என உணர்

அந்த ஸத்வ குணமும்
ஸத் குரு அருளும் (19)
பிரம்மார்ப்பணைக்கால்
நாசமாகி குணத்த
நிலைதானே தோன்றும்
அதுவே **ஜீவன்முக்தி** ஆகும்.

நம் எல்லோருடைய, அறிவும் அவரவருடைய **மனத்திரையால்** (நான்கு எண்ணங்கள்) மூண்டு இருப்பதால், அறிவு பிரகாசிக்க வில்லை என உணர்க.

மேலே கூறிய நிலையில், மனத்திரை விலகிய **மறுக்ஷணம்** மனம் அழிந்து மகத்தாகி அறிவு பிரகாசிக்கும் என உணர்க.

ஆகவே தான், ஸ்ரீ மஹான்களின் ஸத்தியவாக்கு:

**"எல்லோரும் நல்லவரே நம்மவரே"**

நடப்பவை எல்லாம் **நன்மையே** என்றார்கள்.

மனதின் இன்பதுன்பத்தை, சுவைத்து மயங்கியவன் அறிவின் ஆனந்தத்தை எண்ணி அறியான். அது அவனுக்கு தோன்றாது. எவனொருவன் நோக்கிறான் அறிவின் ஆனந்தத்தை அனுபவிக்கிறான்.



நம் அனைவருள்ளும் அனைத்துள்ளும் உ இருக்கும் ஆன்மாவும் இறைவனும் ” ஒன்றே! ஒருவனே! ஆனால் **மனம்!** வேறு வேறாகும் காரணம் வினையை வைத்து மனம் ஆடும். அம்மனதை வைத்து விதி ஆட்டுவிக்கும்.

நான்! எனது என்றல்! இவையே **மனப்** போர்வையாகும் சர்வார்ப்பணமே அறிவின் ஜோதி ஆகும்.


**அறிவு!** மனப் போர்வையால், மூடுண்ட நிலையால், மனித **ஜீவன்!** ஆகிறது.

அறிவு மாயையை! ஏற்றுக் கொண்ட நிலையால், **பகவான்!** என்ற **ஈசன்!** ஆகிறது.

அதே அறிவு! மனமும் மூடாமல், மாயையையும் பற்றாமல், சுதந்திரமாக இருக்கும் போது, அதுவே **ஆன்மா!** ஆகிறது.

அதே அறிவு மனமும் மாயையும் இல்லாமல், **வினை!** சம்பந்தம் கொண்ட நிலையால், மனித இனம் இல்லாத, அனைத்து **ஜீவ!** வர்க்கங்களும் ஆகிறது தாவரங்களும் ஆகிறது

எண்ணத்தால் **மனம்! வினையால்!** நாமரூப தோற்றங்களும்! உண்டாகிறது தனை அறிக.



மனம் குழந்தாய்
இயங்குவதால் 2!
நடுமாற்றமும் அதனால்
ஏமாற்றமும் உண்டாகிறது
ஆகவே ஒவ்வொருவருடைய
குணம்! பேச்சு! செய்கை!
வேறுபட்டும்! மாறுபட்டும்! தெரிகிறது.

மனம் என்றால் எண்ணம்! அதாவது தோஷ கற்பனை!
இந்த எண்ணங்களின் தோஷ கற்பனையே, புண்ணிய
பாபம் ஆகும். அப்புண்ணிய பாபங்களே தூல உடல்
ஆகும்.
இப்படி புண்ணிய பாபம்! எனச் சொல்லும் தூல உடல்!
விண்கூடு! ஆகும். இதில் எண்ணவாறு
குகிறது என்றால்? மன எண்ணம் இல்லாமல் ஜீவ உடல்
இல்லை.
ஜீவ உடல் இல்லாமல் மனமும் எண்ணமும் இல்லை.
மேலே கூறிய, இவ்விரண்டையும் தே,
காலம் என்ற விதி! வருங்காலம்! சென்ற
காலம்! நிகழ்காலமென, சுயமாகவும்
சூட்சுமமாகவும்! இயல்பாகவும்! எச்சிரமமும்
இன்றி!
இவ்வுலகை நடத்தி வருகிறது என உணர்க.
இதை எல்லாம், ஏன் எழுதுகிறோம் என்றால்?
நம்முடைய கவனக் குறைவை! உணர்வதற்கே.



ஆனால் அனைத்திலும்
அனைவருக்கும் ௨௨
இருப்பது ஆன்மாவாகிய

# அறிவு ஒன்றே

இவ்வறிவு **ஏக** குணமாக
இருப்பதால் இருப்பும் இயக்கமும் !
ஒன்றாயிருக்கும். ஆனால் இம்மனதின் குணைக்கிரு

நம் அனைவரிடமும், வினை ! மனம் ! விதி ! ஆகிய
இம் மூன்றும், அதனதன் **வேலையை !**
ஒழுங்காக செய்கின்றன.
தவனம் தேவை !

# வினை (உடல்) ஜடம் !
# விதி ! இயல்பான இயக்கம் !
# மனம் ! ஒன்றே ! வினைக்கு ஆதாரமாகவும் !

விதிக்கு காரணமாகவும் / அமைகிறது என உணர்க
அப்படியானால், மனம் ஒன்றே ! அவ்விரண்டுக்கும்
காரணமாக, இருக்கிறது என்பதே சத்தியம்.
இனி உண்மையை உணர்க :— மனம் என்றால்,
மாயாவின்

# மாயா ! 
வின் மகன் என்றும் / அம்சம் என்றும் !
மறுவடிவம் ! என்பதே பிரமாண உண்மையாகும்.

மாயாவின்




அடிமையாகி (23)
இன்பதுன்பத்தை
சுவைத்து! சுவைத்து!
பழகி **பாழாய்**
போன தன்மையால்
அழுக்க அழுக்க
**உ தோடிமன்னுமதிரை!**
நம் அறிவை மூடிக் கொண்டதை
உணர்க.

மாயா என்றல், ஸ்ரீபகவானின் பிடியில்
உள்ளதென்றும், ,, செயலாது
,, ,, அம்சமாக
,, சொல்வதே பக்தியமாகும்.
ஸ்ரீபகவான் என்றல், **அறிவு!** அறிவு
என்றல் **ஆன்மா!** (அறிவானது) மாயா
சம்பந்தம் கொண்டால், ஸ்ரீபகவான் ஆகும்.
அறிவானது, மாயா சம்பந்தம் இல்லாத நிலையில்,
அறிவே! ஆன்மா! என்பதும் பக்தியமாகும்.

அப்படியானால்?

இந்த **அறிவானது!** ஸ்ரீபகவானையன்!
இல்லாத இடம் இல்லை! இயங்காத பொருள் இல்லை!
இங்கு **மனம்!** என்றல், எண்ண வடிவமே!



முன்பல மடல்களில் கூறியுள்ளபடி ஸத்வ குணம் மேலோங்கில் அறிவை மூடியிருக்கும் மனத்திரை கெட்டழிந்து நாசமாகும். மனத்திரை நாசமான மறுக்ஷணம்! அறிவு தாம் தானே பிரகாசிக்கும்.

24

இந்த மனமாகிய எண்ணம்! இந்த மனது! தோற்றத்தில்தான் உண்டு.

வேறு எந்த தோற்றங்களிலும் இல்லை என்பதே ஸத்தியம்.


அனைத்து ஜீவ வர்க்கங்களிலும், மனம் இல்லை.

அறிவாகிய, ஸ்ரீபகவானிடமும் " மனம்! படைத்ததை இவன் மனிதன்! என ஆனான் என்பதே ஸத்தியம்.

இம்மனிதனிடம் மட்டும் மனமும்! உண்டு. அறிவும்! " .

மற்றும் அனைத்திலும் மனம்! இல்லை. அறிவு! ஸ்ரீபகவான் " மட்டும் " உண்டு என்பதே ஸத்தியம்.

## உள் ஆழ்ந்த கருத்து



நாமரூப ஜக விளக்கம் (25)

வாக்கும் வரியுமாக இருப்பதால் அதன் அம்சம் மனமே!

நாமரூப ஜக விளக்க கர்த்தாவாக இருக்கிறது

ஆகவே அம்மனத்தினை அறவே! ஒழிவிடுவோம்.

மனம் எண்ண வடிவமாக இருப்பதால், இயக்கம் தூலமாக! தோன்றும்.

அறிவு ஓர் நிலையில் சூட்சுமமாக! இருக்கிறது, "மற்றோர் நிலையில்" சத்வ குண எண்ண வடிவமாகவும் இருப்பதால், ஓர் நிலையில் தூலமாகவும் தோன்ற முடியும்.

சத்வ குண எண்ண அறிவானது; உண்மை பக்தனிடமும்! உணர்ந்த ஞானியிடமும்தான் இருக்க முடியுமேயன்றி ஏனையோரிடம் இராது.

இதை வைத்து எண்ண! உணர்கிறோம் என்றால்? சாமான்ய! மனிதனிடம் அறிவும் உண்டு. மனமும் உண்டு. ஆனால் சாமான்ய மனிதன்!



இம்மனம் படைத்த மனிதன் **அறிவை** (26) பயன்படுத்தாத

காரணம்:- நாமரூப ஜகஜீவ உறவு சூத்திரத்தை ஆட வைத்து பெண்! பொன்! இன்ப போகத்தால் இம்மனம் மயக்கிக் கொண்டு ரூபத்தால் அம்மயக்கத்தால் அறிவு மறைக்கப்படுகிறது என உணர்.

ஆனந்தம் அறியாத புத்தி! இன்ப துன்பம் மனமாகவும் இருப்பதால் மனதின் பிடியில் அகப்பட்டவன் அறிவை உணரான்.

அறிவை பயன்படுத்துவதில்லை. ஆனால் மனதை பயன்படுத்துகிறான். இவன் மனதை மட்டும், பயன்படுத்துவதால் அம்மனத் **திரை** அறிவை மூடிவிடுகிறது என உணர்.

**எல்லா** மனிதர்களிடமும் இருக்கும் அறிவு ஒன்றே!

,, ,, ,, **மனம்** வேறு வேறே!

ஆகவேதான் ஒருவரைப் போல், ஒருவர் **இருப்பதும்** இல்லை! **இயங்குவதும்** இல்லை.

எண்ணம்! சொல்! செயல்! எல்லாமே; மாறுபாடாகவும்! வேறுபாடாகவும்! அமைகிறது.

இவன் அறிவை பயன்படுத்தாத காரணம், என்னவென்றால் அறிவின் **ஆனந்தம்** இவன் சுவைத்து அறியான். ஆனால் மனதின் **இன்பத்தில்** மயங்கியவனாக இருக்கிறான்.

## உள் ஆழ்ந்த கருத்து



ஒவ்வொரு மனிதனிடமும் மனம் என்ற (27) குணத்தால்

வினை பின்னிப் பிணைந்திருப்பதால் ஒருவரைப் போல் ஒருவர் இருப்பும் இயக்கமும் இருக்கவாகவும் நிலைக்க முடியாது. இருக்கச் சட்டாது. அதுவே இகச் நியதி.

குறிப்பு :- ஆனந்தத்திற்கு எதிர்மறை இல்லை.

ஆனந்தம் என்றால் அது ஒன்றே! இரண்டல்ல.

இன்பம் என்றால், துன்பமும் உண்டு. இன்பமே துன்பமாய் மாறும். துன்பமே இன்பமாய் மாறும்.

இன்ப துன்பம் இரண்டும், **மனதே** வடிவமாகும்.

இதுவே இன்றைய, கலிகால பழக்க வழக்கமாகும்.

ஆகவே, மனதின் இன்ப துன்பத்தை, அலைவதை அறிவின், ஆனந்தம் அறியார். அறிய முடியாது. அறிய இயலாது.

இம் மனிதன் மனதின் பிடியில் சிக்கிய தன்மையால், **வினைமனம்** எப்படி அமைகிறதோ, அப்படியே இவன் இயங்க வேண்டும். அதை மாற்றவோ! மறுக்கவோ! விலக்கவோ முடியாது.

ஆகவே எவரும்! ஒருவரைப் போல் ஒருவர்! இருப்பதுவும் இல்லை. இயங்குவதும் இல்லை. பேசுவதும் செய்வதும் இல்லை. அது முடியாத காரியம் என்பதே கலியுக விதியும்! ~~நியதியும் ஆகும்.~~

தலை பாபா.




எங்கும் பரந்து விரிந்து வியாபகமாக இருக்கும் மண்ணே பரசொரூபம். ௨௪

மகேசன்! ஹயன்! ஹரி ஹரன்! இந்நான்கும் பாறைகள் என அறிக.

உண்மை!

3 ஆதியன் ஸ்ரீ

காலாதீத பரசொரூபமாகிய **மண்**! ணானது பரவி, விரிந்து, எங்கும் வியாபகமாக, இருப்பதால், ஓர் **தோற்றம்**! மட்டுமே பெறுகிறது.

அம்மண்ணே, இணைக்கத்தாலும்! பிணைக்கத்தாலும்! கெட்டியாய் இறுகி **பாறைகளாகி**

**தோற்றம் & இருப்பு**! என இருநிலைகளா, வகுக்கிறது என அறிக.

இத்தோற்றமும், இருப்பும், **மகேசன்**! & அவனுடைய **சிருஷ்டி**! என அறிக.

சச்சிருஷ்டியை, பரமாணுக்களின் தொகுப்பு! என்றும், இவையே! **அண்டரண்ட பிரம்மாண்டங்கள்**! என்னும்.



உ

அதுவே கேந்திரமான
தன்மையான உ
சதாசிவம்
என்னும் அதுவே மாறை
யானதியில் மகே
சன் என்னும்; அதுவே
பிண்ட சிருஷ்டி என
அனாதியில் திரிகர்த்தாக்கள் என்னும்
ஆனது என மூன்றுகள் யாக்கோல் அமைந்ததும்

கோடானு கோடி கோள்களும்!
" " சூரிய சந்திரர்களும்!!

இதில் அடங்கும்.
அப்பாறைகளே, அதன் நிழலாகிய, யோக மாயாவினில்
உரிசக்தியலைரூபம்!
வரும்போது, திரி கர்த்தாக்கள்! என ஆகிறது.
இத்திரிகர்த்தாக்களின் சிருஷ்டி பிண்ட
சிருஷ்டியாகும். ஆகவேதான், இப்பிண்டம் எனச்
சொல்லும், அனைத்தும் ஜீவ (ஸ்தாவரங்களும் சேரும்) தோற்றங்களின்
சரீரங்கள்! ஆகும். இவை இயக்கத்திற்கு
பயன்படுவதால், இவற்றின் தொகுப்பை!
ஜீவாணுக்கள்! என உரை வேண்டும்.
அண்ட சிருஷ்டி பரமாணுக்கள்! பிண்ட சிருஷ்டி ஜீவாணுக்கள்!
எனமட்டும் உணர்க.




அண்டம்:- மனிதர்கள் வாழும் உலகம். 30

ரண்டம்:- மற்றைய உயிரினங்கள் வாழும் உலகம்.

பிரம்மாண்டம்:- அளவிட முடியாத மிகப் பெரிய கோளக உலகம். 4

அணுக்களின்! விபரம்.


அணுக்கள் என்றால், அபார ஆற்றல்! அளவற்ற சக்தியை உடையது என பொருள்படும்.

இதை பரமாணுக்கள்! என்றும்! ஜீவாணுக்கள்! என்றும், ஸாமான்ய அணுக்கள்! என்றும், மூன்றாக, ஸ்ரீமஹான்கள் பிரித்தார்கள்.

1 பரமாணுக்கள் :- பஞ்சபூதங்கள்! மண் & மல்! ஜலம்! அக்கினி! வாயு! ஆகாயம்! ஆகும். இதில், முதல் மூன்றும், அதாவது மண்! மல்! ஜலம்! இவைகள் தூல! பூத அணுக்கள் ஆகும்.

அக்கினி = சூக்ஷ்ம! பூத அணுக்கள் ஆகும்.



மண் உமலி:—

பிருதிவி:— ③①

பற்றிப் பிடிக்க முடியும்.

ஜலம்:— பிடிக்க முடியாது கையில் தாங்கலாம்.

அக்கினி:— பிடிக்கவோ தாங்கவோ முடியாது ஆனால் காணலாம். அதுஓர் உபயோக வஸ்து.


பிராணன்

வாயு:— காரண / ஆத அணுக்கள் ஆகும்.

நாமரூப

ஆகாயம்:— மஹாகாரண / ஆத அணுக்கள் ஆகும். இந்த ஆகாயத்தை மட்டும், யோகமாயா / அம்சம் என்பார்கள். இந்த ஆகாயத்தை பற்றி பலமடலிக்கனிவில், தெளிநிலை விளக்கம், கொடுக்கிறேன்.

② ஜீவாணுக்கள்:— தாவர வர்க்கங்கள் உட்பட / மனித இனம் உட்பட / மற்றும் 84 லக்ஷம் / ஜீவ கோடிகளின் / சரீர இணைப்பும் பிணைப்பும் ஆகும். ஏன் இதை ஜீவாணு எனச் சொல்கிறோம்கள் என்றால், இவை அனைத்தும் கர்மா / சம்பந்தம் கொண்டு புண்ணிய பாபத்திற்கேற்ப போக்குவரவு / உடையதாகும் எனச் சொன்னார்கள்.




(2) வாயு:- பிடிக்கவோ, தாங்கவோ, காணவோ முடியாது. அதுவே அனைத்து ஜீவகோடிகளின் **பிராணன் (உயிர்)** ஆகும். முன் கூறிய அம்மூன்றையும் இது (ஜீவ அம்சம்) **சூட்சுமம்** ஆகும்.

(3) சாமானிய அணு:- மேலே கூறிய இவ்விரண்டிற்கும் **உபகரணமாக** இணைக்கப்பட்ட **யோகமாயாவின்** அம்சமாகும். இது இன்றைய கலியுக நிலையால், **கர்மகாரியமாக** பயன்பட்டு வருகிறது. இதையே, இன்றைய கலியுக **விஞ்ஞானிகள் அணு** ஆராய்ச்சியினை, செய்து வருகிறார்கள். என ஸ்ரீ மகான்களின், வழியாக அறிகிறோம்.

குறிப்பு:- அணு என்பது தூலக் கண்களால், காணக் கூடியதல்ல. அறிவுக் கண்ணால், உணரக் கூடியதாகும்.





ஆகாயம்:- (33)
முன் கூறிய
நான்கு நிலைகளுக்கும்
எட்டாத தொலைவும் ஆகும்
இது அதி சூட்சுமம்
இது யோகமாயாவின்
அம்சமாகும் இது
இல்லாமல் அந்த
நான்கும் இல்லவே இல்லை

நாமரூப! ஏக ஜீவ தோற்றங்கள்
இது இல்லாமல் இருக்க முடியாது.

கண்களால், காண முடியாது எனச் சொல்கிறீர்களே?
ஆனால் நாங்கள், அனைவரும் மண்! மலை! ஜலம்!
அக்கினி! தாவர வர்க்கங்கள்! அனைத்து ஜீவகோடிகளின்
சரீரங்கள்! மற்றும் எல்லாம், எங்கள் கண்
களால் காண்கின்றோமே? என கேட்கலாம்.

வைராக்கியம்:- நீங்கள் இதுவரை கூறியது, அத்தும் மெய்
ஜடமே! அச்ஜடத்தில், மறைந்துள்ள,
உண்மை! காண்கிறீர்களா?
பயிற்சியும்! முயற்சியும்! கொண்டே உண்மை காண்கிறோம்
அதுவே அறிவாகும்! அதை போல்,
இன்றைய விஞ்ஞானிகளும், அறிவை உடையவர்களே!
என்று
அவர் பகுத்தறிவு விஞ்ஞானம் (அஞ்ஞானம்)
உடையவர்களாகும். ஏன் இப்படி சொல்கிறோம்
என்றால்? ஞானம் வேறு! விஞ்ஞானம்! வேறு!



உலகம் அறியச் செய்து அதை விளம்பரப்படுத்தி வியாபாரம் என ஆக்கியும் விஞ்ஞானம் என்றும் அஞ்ஞானம் ஆகும்

வாயு:- மரங்களை அசைக்கும் ஓம்

காற்று போலவும், அனைத்து ஜீவகோடிக்கும்

ஜனன மரண சஞ்சாரம் செய்ய இந்த வாயுவானது

**உயிர்!** என பயன் படுகிறது. என போற்றப் படுகிறது.

தன்னுள் உணர்ந்து **தாண்டாய்!**

தம்முள் நிறைந்து அதிசயமாய் **பரந்து**

ஒழிந்தது.

**விரிந்து!** ஏகமாய், எங்குமாய், எதிலுமாய்

**நீக்கமற** நிறைகின்ற நைத **ஞானம்!** ஆகும்.

தம்முள் மறைந்து நிறைந்து நாம் காமமான

**ஆத்மசக்தியை!** பிரமாணுக்கள்

**புறப்பொருள்!** மூலமாக வெளியில் கண்டு,

அதனை பேர்! புகழ்! பட்டம்! பதவி! கௌரவம்! பணம் அந்தஸ்து! பெற்று **ஓஹோ!** என வாழ்ந்து காட்டி,

**ஆஹா ஆஹா!** என வீழ்ந்து நாசமானது அஞ்ஞானம்

இது வே **விஞ்ஞானம்** என்னும் அஞ்ஞானம் ஆகும்.

## அணுக்களின் விபரம்



விஞ்ஞானம் எனச் சொல்லும் அஞ்ஞான (35)

நிலையில் புறம் பொருளில்

தம் சக்தியை புகுத்த

**புறப்பொருள் சக்தி**

ஆராய்ச்சியாளர் இவனுடைய முழுமையாக அழிக்கப்படுகிறது.

இதுவே இன்றைய, விஞ்ஞானம் என்னும், அஞ்ஞானம் ஆகும்.

ஊர் உலக வம்பு நமக்கெதற்கு? நம் நிலைக்கு வருவோம்!!!

இந்த மூன்று நிலை, அணுக்களின் பிணைப்பும்! இணைப்பும்! **கருணையால்!!!** என


**இறை** கருணை என்றும், **பர** கருணை என்றும், ஸ்ரீமன்நாராயணனால் பேசப்படுகிறது. ஓர் குறிப்பு!

இன்றைய கலியுக விஞ்ஞானிகளுக்கு, கர்மகாரியமாக, **சாமான்ய** எப்படி **அணு!** பயன்பட்டு வருகிறது என்றால் பாக்டீரியால் காணலாம்.

**ஜீவ அணு!** எப்படி உணரப்படுகிறது என்றும் உணர்த்தப்படுகிறது என்றும். ஓர் விளக்கம் பார்த்து விட்டு, மேலே கூறிய, விளக்கத்தை பார்க்கலாம்.

மன்னன்





அப்படி இவன் (36) சக்தி வீணாக விரயமாவதால்

இவன் **ஜன்மா!** விரயம் ஆகிறது. இவன் பெருமைக்கு அழகும்! இவனுக் பயன்படவில்லையே. இவன் ஜன்மாவை நாசம் செய்யவில்லையே ஐயோ பாவம்.

ஜீவ அணுவை, உணர்த்தும் விதமும் **அதை!**

உண்மையை, உணர்ந்த விதமும், ஓர் உரையாடல் மூலமாகத் தருகிறேன். கருத்தால் உணர்க.

அகன்று! விரிந்து! பரந்த! **ஒன்று!**

**தம்!** இருப்பில், எப்படி இருக்கிறது என்றால்?

குரு :— குழந்தாய்! மணி! அதோ ஓர் ஆலம்பழம்! கீழே விழுந்து கிடக்கிறது பார்! அதை எடுத்து வா?

மணி :— குருதேவா! இதோ கொண்டுவந்தோம்.

குரு :— இந்த மேஜை மீது, அப்பழத்தை வை.

மணி :— அப்படியே வைத்துவிட்டோம் குருதேவா!


குரு :— இப்போது அம் மேஜைமீது, என்ன காண்கிறோம்?

மணி :— ஒரே ஒரு ஆலம்பழம் மட்டும் குருதேவா!

குரு :— மணி! அப்பழத்தை, உடைப்போம்?

மணி :— இதோ உடைத்துவிட்டோம் குருதேவா!

குரு :— இப்போது, உடைத்த அப்பழத்திலிருந்து என்ன காண்கிறோம் மணி?



37

ஜென்ம நாசமாக
வில்லை என்பது
ஓர்மக்கம் இருந்தாலும்
இவனுடைய விஞ்ஞான

**காம** காரியங்களில்
இன்னியும் அறிவு?
யாமம் செய்யும் சிவ சிவ

**பாவ** கர்மாக்கள் பலபல இழிவான
ஜென்மாவுக்கும் வழிவகுத்துவிடுமே?
இவன் என்ன செய்ய முடியும்?

மணி :— நூற்றுக்கணக்கான, ஆலவிதைகள் இருக்கக்காண்கிறேன் குருதேவா!

குரு :— அவ்விதைகளில், ஒரு விதையை மட்டும், தனியே எடுத்து உன் உள்ளங்கையில் வை பார்ப்போம்?

மணி :— அன்பான குருதேவா! இதோ ஓர் விதை மட்டும், என் உள்ளங்கையில் இருக்கிறது குருதேவா!

குரு :— அவ்விதையில், ஓர் ஆலமரம் **ஒன்று** இருப்பதை, நம்புகிறாயா மணி?


மணி :— நம்புகிறேன் குருதேவா!

குரு :— அம்மரத்தை இப்போது, உன் கண்களால் காண முடிகிறதா? மணி?

மணி :— காண முடியவில்லை! ஆனால் அதன் விதையை மட்டும், காண்கிறேன் குருதேவா.

குரு :— மரம் உண்டா? இல்லையா? சந்தேகம் கொடாது மணி. எம் வாக்கை கவனி மணி! கண் **காணாத** மரத்தை! இருப்பதாக, எப்படி நம்புகிறாய் மணி?





இதில் ஓர் உண்மை என்னவென்றால் 108 பரமாணுக்கள் யோகமாயாவின் சம்பந்தம் கொண்டதாகும். இவ்வணுக்கள் யோகமாயாசம்பந்தம் கொண்டதாகும். சாமான்ய அணுக்கள் விஷ்ணுமாயா சம்பந்தம் கொண்டதாகும்.

மணி :— ஆல விதையை வைத்து, அதில் மரம் இருக்கிறது என நம்புகிறோம். அவ் விதை! இவ்வாறில், மரம் இல்லை யென்றே சொல்வோம் குருதேவா.

குரு :— ஓகோ! அவ்வளவு உறுதி! உன் உள்ளத்தில் இருக்கிறதா? பலே பலே! நீ நம்பிக்கையாளனே. சரி மணி! அப் பழவிதைகளில் ஒன்றை! உன் கையால் இருக்கும் விதையை உன் நகத்தால், பிட்டுப் பார் மணி. அப்படிப் பார்ப்பதில், என்ன காண்கிறாய்? மரம் தெரிகிறதா?

மணி :— எம் அன்பான குருதேவா! அப்படி யாம் பிட்டுப்பார்த்ததில், எம் கண்களுக்கு ஒன்றும்! தோற்றவில்லையே குருதேவா!

குரு :— விருட்சம் உண்டென சொன்னாயே?

மணி :— அவ் விதை முளைத்து, மரம் ஆனபோதுதான், மரம் உண்டு. இல்லையாதலில் இல்லை குருதேவா!



இந்த சாமான்ய அணுக்கள் விஷ்ணுமாயா 39 சம்பந்தம் கொண்டதென்று ஏன் சொல்கிறீர்கள் என்றால்? இதில் மனம் சம்பந்தம் கொண்டு ஜீவ ஆசையுடன் தொடர்புடையதாகுமென்றார்கள் சொல்வர்.

குரு:— இதை கவனமாக கவனி மணி!

அவித்தையில், ஓர் விருத்தம் இருக்கிறது.

ஆனால் உன் மனக் கண்களுக்கு தெரியவில்லை.

ஆனால் விருத்தம் உண்டு இருக்கிறது! என உன் அறிவின் உறுதியினை சொன்னாய்.

மனக் கண்களுக்கு தெரியாததை உன் அறிவுக் கண் நம்புகிறது.


உன் அறிவுக் கண் நம்புவதை மனக் கண்கள் காணாத தன்மையால் மனம் நம்ப மறுக்கிறது.

இதை வைத்து நீ என்ன உணரவேண்டுமென்றால்?

மனம் காண்பது நாமரூப காட்சியே!

அறிவு உணர்வது இருப்பின் உண்மையே!

அப்படியானால்?



இந்த ஜீவ ஆசை! (40)

என்பதைச் சொல்லுகிறார்கள் என்றும் வியாபாரம்! விளம்பரமும்!

அடிப்படையாகக் கொண்டு எதை என்பதை கவனித்து வைட்டும் நான்றான்று

**நாமரூபம் :-** தோன்றும்! இவ்வகையாக இருக்கும்! பின் காலகதியில் மாறும் மறையும். ஒன்றுண்டு என்று,

**இருப்பு :-** முன் பின் தோன்றுவதும் இல்லை. அது மாறி மறைவதும் இல்லை.

(A) எள்ளினுள் எண்ணெய் இருக்கிறது.
(B) பாலினுள் வெண்ணெய் ,, .
(C) ஜலத்தினுள் உப்பு ,, .

எள்ளோ! பாலோ! ஜலமோ! நாமரூபம் ஆகும்.
எண்ணெயோ! வெண்ணெயோ! உப்போ!


**மனக்கண்களுக்கு!** தோன்றுதகான
**சூட்சும, இருப்பின், அறை!**

சொரூபமாகும். அதாவது/



அணு என்பது!
காணக்கூடிய (41)
வஸ்து இல்லை.
காட்டக்கூடிய
வஸ்துவும் இல்லை.
எள்ளினுள் எண்ணெயும்!
பாலினுள் வெண்ணெயும்!
இவற்றினுள் உப்பும்!
இருக்கின்றதை எப்படி உணர்த்த முடிகிறதோ
அப்படி உணரும் நிலையாகும் அணு!

ஸித்! சொரூபமான ஆத்மா! ஆகும்.
கடுகு பிரமாணமான, ஓர் ஆவிக்கினுள்
பல நூற்றுக்கணக்கான, மனிதர்கள் இன்பமாயும்
நலியில்,
அகன்று! விரிந்து! பரந்த! ஆவிருக்கும்
உள் அடங்கி! இருப்பது சத்தியமே!
மனம்! கண்ணுக்கு தெரியும் நாமமே காட்சியை மட்டுமே நம்பும்
" கண்ணுக்கு தெரியாத, எதையும் நம்புவதில்லை.
நம்ப முடியாது! நம்ப தெரியாது! நம்ப இயலாது!
ஆசை?
அறிவு! உள் உணர்வினை!
உணரும்! ஆசை காணாது!!
இதுவே ஜீவ அணுவை உணரும் நிலையாகும்.



காரிய கர்மமாக, (42)
ஸாமான்ய அணு
பயன்படுத்தப்படுகிறது
என்றால்?
இட்டகாரி
யார்த்த! நாமரூப
ஜகஜீவ, தோற்றமாக
இந்த ஸாமான்ய அணு!
தொடரும்

ஓர் குறிப்பு!

இன்றைய கலியுக விஞ்ஞானிகளுக்கு, அவர்களின்
கர்மகாரியமாக ஸாமான்ய
அணு! எப்படி பயன்பட்டு வருகிறது என்றால்? (அதன் விளக்கம்)
தன்னுள் தன்னை உணர்ந்து தான் தானாய் இருப்பது,
ஞானம்! ஆகும். இதுவே அறிவு! என்ற
ஆத்மாவாகும். இதுவே மாயாவை சேர்ந்த, ஸ்ரீவத்ஸனும் ஆகும்.
தன்னுள் தன்னை உணராமல், புறம்! பொருளில் தன்
மனம்! புத்தி! சித்தத்தை! செலுத்தி, இந்த
மனம் புத்தி சித்தத்திற்கு, ஆதாரமான!
ஸாமான்ய அணுவை! ஆராய்வது
பகுத்தறிவு! அதாவது அறிவை பகுத்து அறிதல் என்னும்,
அஞ்ஞானம் என்ற விஞ்ஞானம்! ஆகும்.

# அணுக்களின் விபரம்




பயன்படுத்த
படுகிறது,
என சொல்லக் கூடாது
அச்சாமான்ய அணு!
மனம்! வசம் ஆகி
பட்ட இவர்களே,
நாம் பயன்படுத்திக் கொண்டது. என சொல்ல
வேண்டும்.

இதன் உண்மை, எப்படி விளங்கும் என்றால்?

(A) மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரம்! என்ற இந்த
நான்கு அந்தக் கரணங்களையும்! அறிவால்
அறிந்து உணர்ந்தால், அவை நான்கும், நாசமாகி,
மறைந்தாகி அறிவு பிரகாசித்து, அதுவே பேரறிவு
என ஆகி, நிர்வாணநிலையாகிய, ஜீவன் முக்தியை!
பெறுவாம்.

(B) அதை விடுத்து, அறிவை! மனம்! புத்தி!
சித்தம்! அஹங்காரம்! இவைகளால், அலசி
ஆராய்ந்தால், அறிவு மறைபட்டு அறிவு
சூன்யமாய் நாம ரூப, விகார விவகார
த்திலே, ஜனன மரணச் சுழலில் சுழல்வதாகும்.
என ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.
மேலும் ஓர் முக்கிய மானதை உணர வேண்டும்.
அதாவது?



நாம் உண்டு என்றும், நாமே அது வாக இருக்கிறோம் என்றும், நம் இருப்பை உணர்ந்து, நாமே அறிந்தோம், நிறைந்திருக்கிறோம் என்றும். திட உணர்வை பெற்றவனே நான் ஆவேன்.

அணுவே! அறிவு! அறிவே ஆன்மா! ஆன்மாவே! ஸ்ரீபகவான்! ஸ்ரீபகவானே! நாம்! அப்படியானால், நாமே அணு! நாமே அறிவு! நாமே ஆன்மா! நாமே ஸ்ரீபகவான்! அனைத்தும் நாமே!

நம்மை! அல்லவா! எதுவும் எவரும்! இல்லவே இல்லை. இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

இன்றைய, கலியுக விஞ்ஞானிகள், அதாவது அறிவு போன்றவர்கள் (அறிவாளிகள்) அறிவாளி அல்ல. அறிவை அணுவை ஆராய முற்படுவதே விஞ்ஞானம். ஆகவே அவர்கள் புத்தி சாலிகளாகும். அறிவை (அணுவை) ஆராய்ந்தால், இது எப்படி பொருந்தும் என்றால்? அறிவு உண்டா இல்லையா? ஆன்மா உண்டா இல்லையா? ஸ்ரீபகவான் உண்டா இல்லையா? என்ற நிலையில் நான்! உண்டா? இல்லையா? நானே




தன்னை நாம் உண்டு என நம்பாமல், நாம ரூபத்தை ஜீவ இருப்பில்! ஏமாந்து, அதை ஆராய இன்றவன் எவனோ அவனே, அஞ்ஞானி என்ற, விஞ்ஞானியாகும். அவனே நாஸ்திகன் ஆகும்.

தன்னையே! நம்பாத, நாஸ்திக வாதம், போல் ஆகிவிட்டது. இதுதான் கலியுக, விஞ்ஞானியரதி! ஆகும் என, ஸ்ரீமஹான்கள் தாயிவாக அறிகிறோம்.

புறப்பொருள் மோஹம்! இம்மனைத! பற்றிய தன்மையால், அணுவை! பகுத்து அறியும் நிலையில் பயன்படும் அறிவே! ஸாமான்ய அணுவாகும். அதாவது?

தன்னை! நம்பாமல், நாமரூபதோற்றம்! நம்பி மொத்த தோற்றத்தால் அவ்க கூடியவதில், இந்த தடுமாறும் நிலையில் ஸாமான்ய அணு! இவர்களே விஞ்ஞானிகள் பயன்படுத்திக் கொண்ட தனது அனுபவ ஞானிகள் ஆறாக் கேள்விப்படுகிறோம்.





அணு ஆராய்ச்சி!

என்பது கலி(4.6)

தோஷ ஆராய்ச்சி ஆகும்.

தன்னை இக்குரு என, உணராமல், நாமரூப குண தோஷங்களில், ஆழ்ந்து, தன்னை மறக்கடித்து, அஹங்காரம் வெளிப்படுவதாகும்.

அணுவை! ஆராய்வது, அறிவை ஆராய்வதாகும்.

அறிவை! ஆராய்வது, ஸ்ரீபகவானை ஆராய்வதாகும்.

ஸ்ரீபகவான்! ஆராய்வது, ஆத்மாவை ஆராய்வதாகும்.

ஆத்மாவை! ஆராய்வது, தன்னையே, நாம் உண்டா? நாம் இல்லையா?? என, தன்னையே சந்தேகிப்பது! ஆகும் என, ஸ்ரீமஹான்கள்! பூராயமாக அறிகிறோம்.

மனதை! நீயார்? என கேட்டு ஆராய்ந்தால், மனம் அழிந்து மறைந்தாகும்.

அறிவை! நீயார்? என கேட்டால், ஆத்மாவை மனதின், அஹங்காரம்! திரையிட்டு இருக்கும். என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

(அஞ்ஞானம் கூடும்)




எண்ணையும்! வெண்ணையும்! உடம்பும் கண்ணில் (47) காண்கிறோமே அது எப்படி அணு ஆக முடியும் என கேட்கலாம். இதை உணர் முதலில் கண்ணில் கண்டது என்! பாவ்! ஜீவம்! என்று

**தூல** சொரூபமே!

பின் உண்மயற்சி முயற்சியால் **அது** இருக்கிறது என்று உணர்வே! எண்ணை! வெண்ணை! உடம்பு! ஆகும்.

**இறை**! காட்சியோ **அறிவின்**!

**திட**! உணர்வாகும். திடமான கருமனை


**பர உணர்வோ**! **அறிவின்**!

**திட**! வைராக்கியம் ஆகும்.

இது கருமனையல்ல! **திடபாவம்**! ஆகும்.

குறிப்பு:- திட உணர்வு:- இக்கருமனை காட்சி, துவைதமாக தோன்றினாலும், **இறை** காட்சியினால் நாமரூப சொந்த பந்த பாசம் **மனைகள்**! உணர்ந்து **மனம்**! பந்த போன்று பாரம் உணர்ந்து போய், இல்லாததாகி விடும்.





சொந்த பந்த பாசம் பசைகள் இறை 48

உணர்வால் உயர்ந்தால்தான்

பரவுணர்வு என்ற அக்கினியைப் பொறியா

யானை தத்துவம்

அதை எரித்து பஸ்மமாக்க முடியும். ஆகவே இறை உணர்வும் / பர உணர்வும் / முறையாக பெற வேண்டும்

திட வைராக்கியம் :- சொந்த பந்த பாசம் பசையின் பாரம் இருந்தால் ஸ்ரீ ஸத் குரு அருளும், தத்துவமஸி என்ற பர உணர்வின், திட வைராக்கியம் ஸாத்தியமாகாது


மேலே சொன்ன, அறிவின் கூர்மையான, ஸ்ரீ பகவான் சகாயத்தினால், பாசம் பசையின் பாரம் / தானே உயர்ந்த தன்மையால், திட வைராக்கியம் இயல்பாக சித்திக்கும்.

மனதின் காட்சியும் / அறிவின் உணர்வும் / எப்படி இருக்கும் என்றால்?

மனம் ஒன்றை பலபல நாமரூபமாக கற்பனை பண்ணுவது.

அறிவு பலபல நாமரூபங்களையும், ஒன்றாக உணர்ந்து, பேதங்களையும் / விகாரவிகாரம் நீக்குவதும் ஆகும்.

## அணுக்களின் விபரம்



நாமரூப கற்பனை பண்ணி அதில் தோஷ குணங்களை (49) புகுத்தி வினையை வெகு செய்வது மனமாகும். நாமரூப கற்பனை பண்ணாமல் எல்லாம் இறை பாவனை பண்ணி அதையும் கெடுத்து எல்லாம் ஒன்றே என்ற பரமபாவனை பண்ணி வினையையும் அதை சேகரித்த மனதையும் அழித்து அகம் ஒன்றாக ஆக்குவது அறிவாகும்.

### உதாரணம்!

| மனம்! | அறிவு! |
| --- | --- |
| (1) பலரக பழங்களை, ரகரகமாக பிரித்து பிரித்து, விமர்சனம் பண்ணும். | பலரக பழங்களையும், ரகரகமாக பிரிக்காமல் எல்லாம் பழங்களே என, ஒன்று படுத்தும். |
| (2) ஓர் தோப்பின், விருட்சங்களை, ரகரகமாக பிரித்து நாமரூப விமர்சனம் பண்ணும். | ஓர் தோப்பின், விருட்சங்களை, விதவிதமாக பிரிக்காமல், நாமரூபங்களை, விமர்சிக்காமல், எல்லாம் விருட்சங்களே என, ஒன்று படுத்தும். |
| (3) காட்டில் உள்ள, மிருகங்களை இன்னின்ன மிருகம் என, தரவாரியாக நாமரூப விமர்சனம் பண்ணும். | காட்டில் உள்ள மிருகங்களை, இனம் பிரிக்காமல், எல்லாம் மிருகங்களே என, ஒன்று படுத்தும். |
| (4) கடலின் மீன்களை இன்னின்ன மீன்கள் என, ரகவாரியாக, பிரித்து, நாமரூப விமர்சன கற்பனை பண்ணும். | கடலின் அனைத்து மீன்களையும் ரகம் பிரிக்காமல், நாமரூப கற்பனை பண்ணாமல், எல்லாம் ஒரே மீன்களே என ஒன்று படுத்தும். |



அண்டங்கள் 50 பரமாணுக்களை பிணைந்து இணைந்து ஒன்றுகூடி என உணர்.

ஜீவ தோற்றங்கள் அசைத்து பிண்டங்களும் ஜீவாணுக்களின் இணைந்து பிணைந்த ஒன்றுகூடி என உணர்வாயாக.

1. கடுகு அளவுள்ள, ஆலவித்தினுள், ஓர் மிகப் பெரிய ஆல விருக்ஷம் அடங்கியிருப்பதும்,
2. எள்ளினுள், எண்ணெய் உள் அடங்கி இருப்பதும்,
3. பாலினுள் வெண்ணெய் ,, ,, இருப்பதும்,
4. ஐவத்தினுள் உயிர்ப்பு ,, ,, இருப்பதும்,
5. ரூபமில்லா, சுக்கில சுரோணிதத்துள், ஓர் குழந்தை அடங்கி இருப்பதும்,
6. நிச்சலமான, ஓர் வெட்ட வெளியினுள், சுழல்காற்று அடங்கி இருப்பதும்,
7. அண்டத்தில் பிண்டமும், அப் பிண்டத்தில் அண்டமும் ஒன்றினுள் ஒன்று, அடங்கி இருப்பதும்,



நீயே/ யாமே/
நமக்கு அன்னியமாய் ஏதுமே! எவரும் இல்லை.

அண்டத்தில் உள்ளதே (ஓ)
பிண்டத்தில்
பிண்டத்தில் உள்ளதே
அண்டத்தில்

என்றால் அணுவுக்குள் அண்டமும்! அண்டத்தில் பிண்டமும்! பிண்டமே அர்த்தமாய்! உள்ளதை உணர்வாய் உணர்க.

எதை உணர்த்துகிறது என்றால்? அணுக்கள்/ அண்டமும்/ அண்டங்கள் அனைத்தும், அணுவாம்/

சர்வ வியாபகமாய் நீக்கமற நிறைந்து இருக்கும் பரமாகிய/ ஏகம்/ மகிமையை, உரைக்க வாக்கும் இல்லை. வரைய வரியும் இல்லை.

வித்துக்கள்/ ஓர் விருட்சம் அடங்கி இருப்பதுவும்; அவ்விருட்சத்தின் ஓர் பழத்தில் அவ்விருட்சத்தின் வித்து/ அடங்கி மறைபொருளாக இருப்பது போல அணுக்கள்/ அண்டமும்! அண்டமே/ அணுவாம்! நிறைந்திருக்கிறதென ஸ்ரீமான்களின் வாயிலாக அறிகிறோம்.




காலாதீத பரசொரூபம் (52)
மெய் அன்பர்கள்
நிமித்தமாக
உங்கள் அனைவரிடமும்,

# பேசுகிறது!
# (ந) எம் இருப்பு!

| தோற்றம் | இருப்பு | இயக்கம் |
|---|---|---|
| தோற்றம் மட்டும்! | தோற்றமும் அதன் இருப்பும்! | தோற்றமும் அதன் இருப்பும் இயக்கமும்! |
| மறை காரணம் | காரணம் | காரியம்! |
| ① மண்! | பானை! | சிற்பம்! |
| ② ,, | களி மண்! | பாண்டம்! |
| ③ ,, | பொன்! | ஆபரணம்! |
| ④ ,, | இரும்பு | ஆயுதம்! |
| ⑤ ,, | உணவு | உடல்! |

இப்படி கொடுக்கப்பட்ட ஐந்தையும் வைத்து உணரும் இடத்தில் ஒன்றில்லாமல் ஒன்றில்லை! என தெளிவாகிறது. இம் மூன்றையும் வரிசைக் கிரமமாக தெளியுமிடத்து/ எப்படி ஆகிறது என்றால்?



பேரறிவும்! முழுந்த
**முடிவான!** 53
அதுவே நாம்!
நாமே அது! என்ற
ப்ரம்மாண்ட ஸ்மரணையில்
ஸ்மரணையோடு இருக்கும்
நிச்யாகும். அந்த ஸ்மரணையும் கெட வேண்டும்.
அதுவே மஹாமௌனம்.

# பேரறிவு! அறிவு! மனம்!

என உரைவாம்.
இம்மூன்றிலும் **நாமே!** நிறைந்திருக்கிறோம்
என முடிவில் உணர்க.
நாமே பேரறிவாக, இருக்கும் போது, உணர்வு
எப்படி என்றால் **நாம்!** இருக்கிறோம் என்பதாகும்.
நாமே அறிவாக இருக்கும் போது, உணர்வு
எப்படி என்றால் **நாம் அதுவாக!** இருக்கிறோம் என்பதாகும்
நாமே மனமாக **மாறும்!** போது, நம் உணர்வு
எப்படி என்றால் (நாமே பேமாய்) **நமே அனைத்துமாய்!**
நிறைந்திருக்கிறோம் என்ற நிலை பெறுவோம்.



யாமே எல்லாமாய்! (54)
அனைத்துமாய்!
இருக்கிறோம் என்றறிவு
ஆனந்தம்! அது அறிவு!
யாமே! அதுவாகவே!
இருக்கிறோம் என்றறிவு
பேரானந்தம். அது பேரறிவு! நிலை யாமும்.

முதலாவது குணாதீதன்! இரண்டாவதாக ஏக குணன்!
மூன்றாவதாக பலபல தோஷ குணன்!

(1) குணா காரணமாக இருக்கும் போது, எம் நிலை
இல்லை! என்ற நிலையில், இல்லை என்பதும் இல்லை
என, சும்மாவே சுகமாகவே இருந்தோம்.

(2) காரணமாக யாம் ஆகும் போது யாம்!
யாமே! விளையாடப் போகிறோம் என்ற நிலையில்,
இல்லை! என்ற நிலையில் யாம் யாமாக
இருக்கிறோம் என, ஆக்கிக் கொண்டோமே!

(3) காரியமாக யாமே ஆகும் போது, யாம் யாமாகவே
எமக்கு அன்னியம் எதுவும்! எவரும்! இல்லாத
நிலையில் எல்லாமாய்! எதுவுமாய்!
அனைத்து நாமரூபமாய்! எம்மை யாமே
ஆக்கிக் கொண்டு ஆனந்தமாய் விளையாடுகிறோம்.



இ பரம்பரா கவே! 55

இருக்கிறேம் என்பது வாக்கும்! வரியும் மௌனமாய்! அதுவே மௌனானந்தமாய் சும்மா! சுகமாகவே! இருக்கும் நிலை பேரறிவும் ஒடுங்கிய பிரம்மானந்த சகஜ நிலையாமே.

(1) தோற்றம் :— இது வாக்கிய விளக்கமே.

அதாவது தான்தானை! தனக்கு அயல் ஏதுவும்! எவரும்! இல்லாததான; அதனை ஆனால் இல்! என்று சொல்வதான; வாக்கிய விளக்க மண்! என்று உவமானமாய் சொல் எனச் வதான; அப் பரந்தது! உண்டு மண் என்றது சொல்வதற்கு தோற்றம்! என, தொடுக்கிறேமே யன்றி உண்மையில் தோற்றம் இல்லை.

பின் வரும் இருப்புக்கு! இது மூல காரணமாக இருப்பதால், இதை எம் ஸ்ரீமான்கள் மூலா காரணம் என சொல்லி வைத்தார்கள்.



யாம்/எம் மாயை (56)

வைத்து நாமரூபங்களையும் அதனால் இன்ப துன்பங்களையும் அதனால் புண்ணிய பாபங்களையும் அதனால் தோஷ குணங்களையும் உண்டுபண்ணி எம் நாமரூபங்களாலேயே காரசாரமாக விளையாடிக் கொண்டு

தொடரும்

(உ) இருப்பு :– தோற்றம் இருந்தால்தான்.
இருப்பு உண்டு. இருப்பு என, இருந்தால்தான்
தோற்றம் உண்டு. ஆகவே, உறுதியான
நிலையில், இதை பாறை என்றார்கள்.
ஸ்ரீமஹான்கள். இங்கு தோற்றமும்,
இருப்பும்! இருந்தால்தான், அந்த ஒன்று
இயக்கத்திற்கு பயன்படும்.
ஆகவே, இருப்பான ஒன்று, இயக்கத்திற்கு,
பயன்படப் போகும் காரணத்தால், இதை
காரணம் என்றார்கள். எந்த ஒன்றிற்கும்
காரணம் இருந்தால்தான் காரியத்திற்கு
அது பயன்படுவதாகும்.!



ஜனன மரணத்தையும்
உண்டு பண்ணி 57
இயாம் ஹிருதயாகு
ஷேமேயன்றி அவை
உண்மை! அல்ல.
அந்த எம் அறிவை மாயா
கவர்ந்த ஆத்மாவை வைத்துக் கொண்டு

இ இயக்கம் :- அக்காரணை வந்து பாறைகள்
காரியத்திற்கு, பயன் பட வேண்டுமானால்
தோற்றம்! இருப்பு! மாற்றம்! மறைவு! என
நான்கு நிலைகளில், பயன் பட வேண்டும்.
இப்படி நான்கு நிலைகளிலும் பயன் படும் நிலையில்,
அக்காரணை வந்து பாறைகள் நாமரூபம்!
பெற வேண்டும். நாம ரூபம் பெற்றுவல்
லாது அது இயக்கம் பெற முடியாது. அங்கு
எம் நிழவாகிய யோகமாயா! வானது
உள் சக்தியல் தன் காரியத்தை செய்வ
~~செய்து~~
தைக் கிறதுதான் சொல்ல வேண்டும். னே
யாமேயன்று! நிலைகளும் தோற்றம்!
இருப்பு! இயக்கம்! என ஆக்கிக் கொண்டோம்.
இங்கு வேறு எதுவும்! வேறு எவரும்! பொறுப்பல்ல.
இல்லவும் இல்லை.



ஸத்திய தர்மத்தை உண்டுபண்ணி! 54 தேவ தெய்வ நாயகர் முத்திரையும் உண்டுபண்ணி ஜீவர்களின் ஆட்டபாட்டிற்காக எம் பூலோக மாயாவின் துணையுடன் ஜீவராசிப்பு என செய்து யாமே விளையாடுகிறோம்.

இதை ↑ இயக்கம் என்பதை, லீலை! என்றும், அது ஓர் விளையாட்டு என்றும் சொல்வதாம்.

இப்போது எம் விளையாட்டு எப்படி ஆரம்பம் ஆகிறது என்றால்? எம் விளையாட்டிற்காக, சில ஜீவர்களும்! வேண்டும். இவர்களை, ஆட்டி வைக்க, மனம்! என்ற ஓர் ராங்கம்! வேண்டும். அக்ரோநிகை ஆட்டி வைக்க, கோல்! (கண்டிக்கும்) என்ற விதி! தேவனும் வேண்டும்.

குறிப்பு:— இந்த கோல் என்ற விதி தேவன்! இறைவனும்! நீங்கண்ட குருவும் ஆவான். என்பதை, ஸ்ரீமந்நாரன்கள் மாயிலாக அறிகிறோம்.



உ

இங்கு விதிதேவன் (59)

என பட்டங்களை

குறிப்பிடுவது ஸ்ரீபகவான்

ஆகும். இதன் விபரம்

என்ன வென்றால்?

வினை நாசம்!

நாவத்திலிருந்து உண்டாகும்.

மன! குரங்கும். அதை ஆட்டும், கோல்! பற்றிய (இறைகுரு)

ஓர் சிறிய விளக்கம்.

1) மனக்குரங்கு: குரங்கு கிளைக்கு கிளை, தாவித் தாவி

குதிக்கும். ஓர் இடத்தில் நிலையாயிருப்பதில்லை.

மனமும், அவ்வாறே, நிலை இல்லாமல் எண்ணங்

களால், உந்தப்பட்டு, இன்ப துன்பத்தை, அதாவது

புண்ணிய பாபத்தையே நாடிச் செல்லும்.

குரங்கு பிஞ்சு, காய், இலை, கிளை, இவைகளை காரணமே

இல்லாமல், பிய்த்தெறிந்து, நாசம் செய்யும்.

மனமும், அவ்வாறே, சொல்லியோ, செயலியோ,

இது தீமை பயக்குமோ? இது நன்மை பயக்குமோ?

என ஆராயாமல், எண்ணியபடி பேசி! செய்து!

அவனைக்குள்ளாக்கும். தன்! அவலத்தை

தனக்கு! தெரியாது. அகங்காரமே, அதன்

மோஹாவேசமாகும்!



(60)

அது அதி தூய
**வினை**யின்
கணக்கை சரிபார்த்து
முடிப்பதற்காகும்.
அங்கு ஸ்ரீ பகவானையும்
இணைந்து செயல்படும் போது
மாயாவின் மகன் **மனது**
கண்காணித்து அதை மனக்கட்டுக்குட்படுத்தும்.

குரங்கு, இனப்பெருக்கத்தில், அதிக பிரியமும் வேகமும் உடையது.

இந்த மனமும் **காமகாஞ்சன** (பெண் & பணம்) **பேராசை மோகத்தோடு** கூடியதாகும்.

குரங்கு மேலே கூறிய நிலையால், **வெறி** கொண்டு அலைவதால், ஒன்றுடன் ஒன்று, சண்டை போடுவதும், ஒன்றைக் கொன்று, விரோத குரோத, வெறி கொண்டு, தாக்கி துவம்சம் பண்ணும்.

இந்த மனமும், அவ்வாறே, ஒருவனை ஒருவன் தோஷ குணங்களால், கண்டு கொண்டு, மனம் பொருமி **போட்டி பொறாமையால்**, உந்தப்பட்டு, விரோத குரோதங்கள், மறக்க முடியாமல் மனம் புண்பட்டு, வெந்து கெட்டழிவதாகும்.



ஒருவன் (61)

சகாயத்தினால் **துவைத** பயம் ஒழிந்து அத்வைத ஆனந்தம் நிலைபெறுக பொருட்டு இருந்திடின் ?

உ தோல்:- இது மரத்தில் இருந்து ஒடித்தோ! ஒடிந்தோ! வெட்டித் துண்டித்தோ! மரத்தை விட்டு தனியே பிரிந்த, ஓர் குச்சி (கழி) ஆகும்.

அது போல் குருவும்! குடும்பம் என்ற ஓர் மரத்திலிருந்து, பிரிந்து **தனியே!** வந்த, ஓர் பட்ட கம்பே!

அக் கம்பானது, தனிக்கப்பட்டு, உலர்ந்து போன தன்மையினால், அது துளிர் விடாது.

அதே போல் குருவும்! சொந்த பந்த பாசப்பிணைப்பை விட்டு, தனித்தவராகும். நாமரூபமதை, இல்லாதவராகும்.

இப்போது ?

அக்குரங்கானது, நாம் முன்பு விடாமைய பற்றின் குச்சியானது, உலர்ந்து போன தன்மையினால், அப்பட்ட கம்பை, வைத்திருப்பவரை கண்டாலே குரங்குக்குப் **பயம்!** (நாமும் பட்டுப் போவோம் என்ற பயம் உண்டு)



மாயாவின் (62)
காரியத்தையும்!
மனதின்!
நாமரூப மருட்சியையும்
முறையோடு நீக்கி அதுவே
நாம்! நாமே அது! என ஆக்கிவைக்கும் ஆசை,

[illegible]

இவையும்,
↑ அதைப்போல, பட்டகத்தைப் போல் உள்ள,

குருவாக்கு! இம்மனக்குரங்கு!
பயந்தே ஆகவேண்டும். இதைப்போல?
விபரம் அறியா, பச்சை குழந்தைக்கு, அதன்
அன்னையின், கையைப் பற்றாமல், நடந்து செல்ல
முடியாது. இது ஆழ்ந்த பக்தி நிலையாகும்.

இது ஸ்ரீ பகவானைக் குறிக்கிறது. அதேபோல?
இயலாது! வயோதிகனுக்கு, ஓர் கோல்!
அவஸ்யம் தேவை. கோல் இல்லாமல், அவனால்
செவ்வனே நடக்க முடியாது.
இது உணர்ந்த ஞான நிலையாகும்.

இது ஓர் குருவைக் குறிக்கிறது.
அங்கும், இங்கும், துவைத பாவனையில் இரு
ஓர் உறுதுணை தேவை. முடிந்த முடிவில்
துவைதம்! ஒழிந்து அத்வைதம்!
நிலவுகிறது.



குரு என்ற குச்சி (6) இல்லாமல் எவரும் சாதனை செய்து ஆழ்ந்த பக்தியையோ? உணர்ந்த ஞானத்தையோ? பெற முடியாது என்பது லக்கிய வாக்கியம்; ஸ்ரீமஹான்களின் அனுபவமும் ஆகும்.


(1) நான்! என்றவீ! எனதை! விடாதவர்களுக்கு, மனமைய பிராந்தி மயக்கமான; சோதனையும்! வேதனையும்! உண்டு. ஆனந்தம் இல்லை.

(2) உரிமை! உடைமையை! விடாதவர்களுக்கு, மனமைய! பிராந்தி மயக்கமான; சோதனையும்! வேதனையும்! உண்டு. ஆனந்தம் இல்லை.

(3) முறையாக இறை/குரு! நம்பிக்கை இல்லாதவர்களுக்கு மனமைய! பிராந்தி மயக்கமான; சோதனையும்! வேதனையும்! உண்டு. ஆனந்தம் இல்லை.

(4) உடலில் பணிவும், சாதனையில் பொறுமையும், இல்லாதவர்களுக்கு மனமைய! பிராந்தி மயக்கமான; சோதனை வேதனை உண்டு. ஆனந்தம் இல்லை.

(5) இவை அனைத்தும், சர்வார்ப்பணம்! ஒன்றுமே பெறமுடியுமே யன்றி வேறு எந்த மார்க்கமும் இல்லை.



ஓர் உண்மையை (64)
உணரவும்:—
விளையாடுகிறான்!
என்றால் அது ஸ்ரீபகவானை
குறிக்கும். அப்பகவான்
நமக்கு அளவாக இல்லை!
என்பதே ஸத்தியம். ஆகவே இதை
தொடரும்:

(1) நாமே ஜீவர்களாக ஆகும் போது, எம்பகுதியாக்
காக, நன்மைதீமை! என புண்ணியபாபத்தை!
எம் விளையாட்டின் நிமித்தம், ஏற்படுத்திக்
கொண்டோம்.

(2) நன்மைதீமை என்று புண்ணிய பாபத்தை,
உண்டுபண்ணும் நிமித்தமாக, எம் நிழலாகிய
மாயாவின் மைந்தனை எம்
மனதையும்! நாமே உண்டுபண்ணினோம்.

இவன் (மனம்) நம் விபரீத கர்மாவையும்,
ஸாத்வீகமான கர்மாவையும், பேதா பேதம்!
விருப்பு வெறுப்பு! குற்றம்குறை!
இவைகளில், குணதோஷங்களை பின்னிவிட்டுச்
செய்து அமோகமாக விளையாடுகிறான்
இல்லை, இல்லை! விளையாடுகிறோம்!



விளையாடுகிறேன் (65)
என்றறியில்
இதுவைத
பயமில்லாமல்!
விளையாடுகிறோம் என்றே,
விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்றே,

(3) இப்படி மனம் படைத்த, ஜீவனாகவும்! அம்மனமாகவும்! ஆன எம்மை திரமமாகவும், ஒழுங்காக வழிநடத்திச் செல்லும் காவல் விதி! தேவனுமாக/ யாமே இருந்து கொண்டு, இப்படி மென்று! நில்கனியும் யாமே! விளையாடுகிறோம்! விளையாடிக் கொண்டும் இருந்தோம்• எம் ஆத்மானந்த குழந்தைகளே! இப்படி யாம், ஆனந்தமாக! விளையாடும் விளையாட்டை! மனம் வசம் சிக்கிக் கொண்டோர் மட்டும்! விளையாட்டை விளையாட்டாக கருதாமல், தவத்த பய துக்க வேதனையாக தொடர்கிறார்களே பாவம்? என்னே அறியாமையின் மயக்கம்? என்னே இன்ப போதையின் மயக்கம்? என்னே உடல் உலக, உறவின் உணர்ச்சியின் மயக்கம்?



அனைத்தையும் ஒன்றாக்கி (66)

சுத்த அத்வைத நிலையில் அநுபவத்தை பெருகின்றவர் துவைதமயம் அற்று ஏகத்வநிலையும் பிரம்மானந்தமயமாகவே இருப்போம். ஸ்ரீ பாபா.

இது எப்படி இருக்கிறது என்றால்?

↑ அடர்த்தியாக ரோமம் உள்ள காடையை! (பெண் & பொன்) காம & காஞ்சன ஆசையுடன் பஞ்சு போன்று மென்மை தழுவுவது போல இன்பம் தருவதால் விஷயவிஷம் இன்பத்தை விடமுடியாமல் மனை மயக்கம் கொண்டால் இதற்கு எவர் பொறுப்பு? மனமே பொறுப்பாகும்!! மனமே அனைத்திற்கும் பொறுப்பே அன்றி நீங்கள் ஏதும்! பொறுப்பல்ல என்பதே ஸத்தியம். அனைத்தும் மாயமே! என்பதே ஜீவ ஸத்தியம். ஆகவே இந்த நாமரூப ஜக விளையாட்டை ஓர் நாடக நடிப்பின் விளையாட்டாக கருதவும் சோதனையாகவும்! வேதனையாகவும்! எண்ண வேண்டாம். யத் பாவம் தத் பவதி! என்றறிந்து ஸ்வய அநுபவம் பெற ஆரம்பித்து விட்டோம். இருப்பது ஒன்றே! நடப்பதுவாகி அதுயாதெனில் அது நீங்களே! ஸ்ரீ பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!